DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.313/2023**

**prosecution witness: PW-3**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**A1, 2 present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | கருப்பசாமி | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>15.10.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் இராமேஸ்வரம் சத்தியா நகரில் வசித்து வருகிறேன். நான் மீன் வியாபாரம் செய்து வருகிறேன். தேதி மாதம் வருடம் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். போலீசார் கேட்டுகொண்டததன்பேரில் போட்டேன் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 16.03.2021ம் தேதி காலை 11.00மணிக்கு நானும், சிவா என்பவரும் சத்தியா நகரில் உள்ள மஞ்சுளா என்பவர் வீட்டிற்கு முன்பு நின்றுகொண்டிருநதோம் என்றால் சரியல்ல. அப்போது அங்கு வந்த நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தார் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், சிவா என்பவரும் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.10.15 15:29:04 +0530

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.313/2023**

**prosecution witness: PW-2**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**A1, 2 present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | மாரி | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>15.10.2024</u>

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் இராமேஸ்வரம் சத்தியா நகரில் வசித்து வருகிறேன். நான் மீன் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி மாதம் ஞாபகம் இல்லை. என் வீட்டில் மோதிரம், தோடு, லேட்பாப் ஆகியவை காணாமல் போனது. அதற்காக எனது மருமகள் நகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் விசாரணை செய்தபோது பாண்டி என்பவர்தான் எடுத்தார் என்று எங்களுக்கு தெரியவந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள் என்பதால் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வீட்டில் வைத்து வாங்கினார்கள். கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. பாண்டி வீட்டில் இருந்து எந்த பொருளையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. காவல்துறை அதிகாரிகள் அடித்து கேட்டதினால் அந்த பையன் எடுத்து கொடுத்தார். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது எனது மருமகள் கொடுத்த பொய்யான புகாருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.10.15 15:29:10 +0530